புரட்சிப்

# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • சனவரி(JANUARY), 22 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 4 • விலை(PRICE) ரூ.6.00



## தமிழ்நாட்டின் வளர்ச்சியும் தனித்துவமும் உறுத்துகிறதா?

### ஆளுநர் வாசிக்க மறுத்த உரையில் இருந்தது இதுதான்!

**தேசிய கீதத்தை பாட மறுத்ததால் உரையை வாசிக்காமல் சட்டப் பேரவையில் இருந்து வெளியேறினார் ஆளுநர் ஆர்.என்.ரவி. சட்டமன்ற மரபுப்படி அவையின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் பாடப்படுகிறது. அந்த நடைமுறைதான் இம்முறையும் பின்பற்றப்பட்டது. எனினும் அரசியலமைப்பு கடைமையைச் செய்யக்கூடாது என்ற கொள்கையோடு வாழும் ஆர்.என்.ரவி தொடர்ந்து முன்றாவது ஆண்டாக உரையை வாசிக்காமல் ஓட்டம் பிடித்தார். ஆர்.எஸ்எஸ் ரவியால் ஏற்றுக் கொள்ள இயலாத அளவுக்கு சாதனைகளும், பா.ஜ.க.வுக்கு எதிரான தமிழ்நாட்டின் தனித்துவப் பார்வையும் இருந்ததே உரையை வாசிக்க மறுத்ததற்குக் காரணம் என்பதே உண்மை.**

அவற்றில் இருந்து சில துளிகளை மட்டும் தருகிறோம்.

• ஒன்றிய அரசின் கல்விக்கொள்கையில் வரையறுக்கப்பட்ட மும்மொழிப் பாடத்திட்டத்தை இந்த அரசு ஏற்கவில்லை. இதனால், தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட வேண்டிய மானியங்கள் நிறுத்திவைக்கப்பட்ட போதும், அதனால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டபோதும், ஒன்றிய அரசின் மும்மொழிப் பாடத்திட்டத்தை ஏற்பதில்லை என்பதை பல்வேறு தருணங்களில் இந்த அரசு தெளிவுபடுத்தி வந்துள்ளது. என்றுமே இருமொழிப் பாடத்திட்டம் என்பதே தமிழ்நாட்டின் கொள்கை என்பதை இந்த அரசு வெளியிட்டுள்ள தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கையில் உறுதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 1968ம் ஆண்டு அண்ணா வகுத்துத் தந்த இருமொழிக் கல்வித் திட்டத்தினை நாம் நமது இரு கண்களைப் போல காத்து வருகிறோம். நம் உயிரோடும். உணர்வோடும் கலந்துள்ள செந்தமிழைக் காப்பதில் சமரசம் என்ற பேச்சிற்கே இடமில்லை.

• இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து இம்மாமன்றம் பல்வேறு காலங்களில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. தற்போது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் மூன்றாம் மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் இந்த நடவடிக்கையை மறைமுக இந்தி மொழித் திணிப்பாக மட்டுமே இவ்வரசு கருதுவதோடு, இதனை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசை இவ்வரசு வலியுறுத்துகிறது.

• ஒன்றிய அரசு எதிர்மறை மனப்பான்மையுடன் மாநில அரசை அணுகி வருவதால், மாநில அரசிற்கு உரிய திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்து நிராகரிக்கபட்டு வருவது கவலைக்குரியது. தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு எதிரான நிபந்தனைகளை ஒன்றிய அரசு விதித்து, அத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் பெருந்தடைகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், திட்டங்கள் முற்றிலும் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. இது, மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக உள்ளது.

• மிக்ஜாம், பெஞ்சல் போன்ற இயற்கைப் பேரிடர்களால் தமிழ்நாடு பெரும் சேதத்தைச் சந்தித்த நேரங்களில் மாநிலத்தின் நிவாரண உதவி கோரிக்கைகளை முழுமையாக ஏற்காமல் சொற்பமான தொகையை விடுவித்தது ஏமாற்றம் தருகிறது. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் ஆண்டுப் பணித் திட்டத்திற்கான தொகையை ஒன்றிய அரசு முழுமையாக விடுவிக்காமல் உள்ளது. ரூ.3.548 கோடி நிதியை ஒன்றிய அரசு விடுவிக்காததன் காரணமாக, அத்திட்டங்களுக்குரிய முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுள்ளது.

• பள்ளிக் குழந்தைகளின் நலன் காத்திட நமது முதல்வர் இந்தியாவிலேயே முதன்முறையாக 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை' அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் தற்போது 19.34 லட்சம் குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர். நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகளுக்கும் தேவையான ஊட்டச்சத்து உறுதி செய்யப்பட்டுள்ளது மட்டுமின்றி, அவர்களின் பள்ளி வருகையும், கற்றல் திறனும் உயர்ந்துள்ளதை மாநில திட்டக்குழுவின் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

• தோழி விடுதி திட்டத்தால் தொழிற்சாலைகளில் அதிக பெண் ஊழியர் பணிபுரியும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது: தங்கள் இருப்பிடங்களை விட்டு நகரங்களுக்கு வரும் பெண்கள் நவீன வசதிகளுடன் நியாயமான கட்டணத்தில் பாதுகாப்பான தங்கும் வசதியை பெற்றிட 19 'தோழி விடுதிகள்' ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்கள் மூலம் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்களை அதிகமாகக் கொண்ட (40.3%) மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

• கடந்த நிதியாண்டில் 11.19 விழுக்காடு என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது. கடந்த 14 ஆண்டுகளில் இத்தகைய உயர் வளர்ச்சியை நமது மாநில அடைவது இதுவே முதல்முறை. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

## ஆளுநர் பதவியை ஒழித்துக்கட்ட வேண்டும்!

ஒவ்வொரு ஆண்டு துவக்கத்திலும் ஆளுநர் ரவி சட்டமன்றத்தின் மரபுகளை மீறுகிறார்; சட்டத்தை அவமதிக்கிறார்; அதற்குப் பதிலாக சரியாக வாங்கி கட்டிக் கொள்கிறார். இந்த ஆண்டும் இதுதான் நடந்து இருக்கிறது. அமைச்சரவை தயாரிக்கும் உரையை சட்டரீதியாக படிக்க வேண்டிய ஒரு ஆளுநர், அதை அதிமுக, பாஜக கூட்டணியின் பிரச்சார உரையாக மாற்ற முயற்சி செய்து இருக்கிறார். அதனால் சட்டமன்றத்துக்குள்ளே உறுப்பினர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் பாஜகவின் பிரதிநிதிகளான ஆளுநர்கள் செயல்பாடுகளால் கேரளா, மேற்கு வங்கம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, தெலுங்கானா மாநிலங்களில் மோதல்கள் வெடித்தன. 2022-ல் தெலுங்கானாவில் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் இதே போன்று ஆளுநர் தமிழிசையுடன் ஏற்பட்ட மோதலில் ஆளுநர் இல்லாமலே சட்டமன்றத்தைக் கூட்டினார். ஆளுநர் உரை கட்டாயம் அல்ல என்று அறிவித்தார். நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு ஆளுநர் தமிழிசை பணிந்து அமைச்சரவை உரையை அப்படியே படிக்க முன் வந்தார். இது தொடர்பான வழக்குகளில் தீர்ப்பளித்த நீதிமன்றங்கள் ஆளுநர்கள் கட்டாயமாக உரையாற்றியே ஆக வேண்டும் மறுக்கக்கூடாது என்று தீர்ப்பளித்தது.

ஆனால் உரையில் ஆளுநர்கள் மாற்றம் செய்வது பற்றி நீதிமன்றம் கண்டிப்பு காட்டவில்லை. அதன் காரணமாக கேரளா,மேற்கு வங்கம், போன்ற மாநிலங்களில் ஆளுநர்கள் சில மாற்றங்கள் செய்து கொள்ளும் சமரசங்கள் வந்துவிட்டன. அமைச்சரவை தயாரிக்கும் உரையில் ஆளுநர்களின் அரசியல் தலையீட்டை உறுதியாக எதிர்த்து நிற்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே! ஆளுநர் உரை நிகழ்த்தாமலே கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு சட்டமன்றம் இயங்குகிறது. அதே நேரத்தில் அமைச்சரவை தயாரித்த ஆளுநர் உரை சட்டமன்றப் பதிவாகிறது.

"ஆளுநரின் மரபு மீறிய பேச்சுகள் பொதுவெளியில் வேண்டுமானால் இருக்கட்டும்; அதற்கு சட்டசபையில் இடமில்லை" என்று முதலமைச்சர் தெளிவாக அறிவித்து விட்டார். அது மட்டுமல்ல ஆளுநர் பதவியே எங்களுக்குத் தேவையில்லை என்பதையும் பிரகனப்படுத்திவிட்டார். ஆளுநர் உரை இல்லாமலே கூட்டத் தொடரை நடத்தலாம் என்று சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தையும் முதலமைச்சர் ஓங்கி ஒலித்து இருக்கிறார். கொள்கை வேறு; கூட்டணி வேறு என்று இதுவரை பேசி வந்த எடப்பாடி பழனிச்சாமி இப்போது பாஜகவுடன் சேர்ந்து வெளிநடப்பு செய்ததன் வழியாக எங்கள் கொள்கையும் பாஜக கொள்கைதான் என்பதை அறிவித்திருக்கிறார்.

ஜெயலலிதா முதல்வராக இருந்த போது ஆளுநர் சென்னா ரெட்டி கண்களில் விரலை விட்டு ஆட்டினார். சென்னா ரெட்டியை விமர்சிக்கும் கருத்துக்களை ஆளுநர் உரையில் ஏற்றி அதை அவரையே படிக்க வைத்தவர் ஜெயலலிதா.அந்தக்கட்சி பாஜகவில் கரைந்து கொண்டிருக்கிறது.தமிழ்நாடு சட்டமன்றம் தனது இறையாண்மையை வரலாற்றுப் பெருமையுடன் காப்பாற்றிக் கொண்டு பிற மாநிலங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது.

*- விடுதலை இராசேந்திரன்,*
*முகநூல் பதிவு-*
*20.01.2025*

## ஈழத்தமிழர் நலனுக்காக முதல்வர் கடிதம் அனுப்பியதற்கு வரவேற்பு!

***ஈழத் தமிழரின் அரசியல் உரிமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமருக்கு கடிதம் எழுதியதை வரவேற்கிறோம்! தமிழின அழிப்புக்கு ஈடுசெய் நீதியாக அரசியல் தீர்வு அமைய வேண்டும்! ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு அறிக்கை***

கடந்த சனவரி 11 -ஆம் நாள் ஈழத் தமிழரின் அரசியல் உரிமைகளைப் பாதுகாத்திட தூதரக உறவுகளைப் பயன்படுத்தி உடனடியாக சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருப்பதை ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு வரவேற்கிறது. அதுபோலவே, 'தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்' என்ற முழக்கத்துடன் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் முன்னெடுத்து வரும் அயலக தமிழர் மாநாடு பாராட்டுக்குரியது. உலகெங்கும் உள்ள தமிழர்களின் பிரதிநிதிகளை அழைத்து பண்பாடு, கலை, இலக்கியம், வணிகம், தொழில் வளர்ச்சி ஆகியவை குறித்துப் பேசுவது தமிழர்கள் கூட்டுப் பலத்துடன் உயர்வதற்கு உதவும் என்ற வகையில் இம்முயற்சி தொடர வேண்டும். தமிழீழத் தாயகத்தில் இருந்து அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழ்நாடு முதலமைச்சரை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியது ஈழத் தமிழர்களின் பக்கம் தமிழ்நாடு நிற்கிறது என்ற நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்னான இந்த 16 ஆண்டுகளில் இலங்கை தீவின் வடக்கு கிழக்கை தாயகமாக கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள் கட்டமைப்பு வகைப்பட்ட இனஅழிப்புக்கு ( Structural Genocide) ஆளாகிவருகின்றனர்.

நிலப்பறிப்பு, பௌத்த விகாரைகளை நிறுவி பண்பாட்டுத் திணிப்பு, சிங்களக் குடியேற்றங்கள், படைக் குவிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டு செயல்படுத்தப் படுகின்றன. அத்தகைய ஓர் கட்டமைப்பு வகைப்பட்ட இனஅழிப்பின் பகுதியாகத்தான் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை கொண்டு வருவதன் மூலம் ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்தப் பார்க்கின்றது சிங்கள பௌத்தப் பேரினவாதம். தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற அடிப்படையில் ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றப்பட்டு கூட்டாட்சி ஏற்பாடு தமிழர்களுக்கு உறுதிசெய்யப்பட வேண்டும். அது மட்டுமின்றி, முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழர்களுக்கு பன்னாட்டு சட்டநெறிகளின்படி ஈடுசெய் நீதியாக (Remedial Justice) தமிழர்களின் இறைமை மீட்டளிக்கப்பட வேண்டும்.

கடிதத்தில் குறிப்பிட்டது போல் ஈழத் தமிழர்கள் இனஅழிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்பது தமிழர்களின் கூற்று மட்டுமல்ல, நம்மைத் தாண்டி பலரும் அதை அறிந்தேற்று வருகின்றனர். எடுத்துக்காட்டாக, 2011 ஆம் ஆண்டு அய்.நா. அமைத்த மூவல்லுநர் குழு 40,000 த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று அறிக்கை தந்துள்ளது. மேலும் 2014 ஆம் ஆண்டு அய்.நா. உள்ளக ஆய்வறிக்கை 70,000 த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று சொல்லியுள்ளது. கனடா மே 18 ஆம் நாளை தமிழின அழிப்பு நாளாக ஏற்றுள்ளது. அண்மையில் ஸ்காட்லாந்து நாடாளுமன்றம் தமிழர்கள் இனவழிப்புக்கு உள்ளாகி இருப்பதை அறிந்தேற்றுள்ளது.

மேலும் தமிழ்நாட்டு சட்டப்பேரவையில் போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனஅழிப்பு குற்றங்களுக்குப் பன்னாட்டுப் புலனாய்வு நடத்தப்பட வேண்டும் என்றும் பொதுவாக்கெடுப்பு நடத்தி அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு எப்போதும் தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டை துச்சமாக மதித்து சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு துணை செய்தே வந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டு சட்டப்பேரவை தீர்மானத்தை நினைவுபடுத்தி, இனஅழிப்பையும் கருத்தில் கொண்டு ஈடுசெய் நீதியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு வலியுறுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறோம். மேலும், இனஅழிப்புக்கு நீதியும் அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பும் கோரும் தமிழ்நாடு சட்டப்பேரவை தீர்மானத்தை பன்னாட்டு அரங்கிற்கு கொண்டு செல்வதற்கு தனித்தும் இந்திய அரசின் வழியாகவும் தொடர்ந்து முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். தமிழ்நாடு அரசு ஈழத் தமிழரின் அரசியல் தீர்வுக்காகவும் இனஅழிப்புக்கு நீதி பெறவும் தொடர்ச்சியாக இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

**தோழமையுடன்**
**கொளத்தூர் மணி, தலைமை**
**ஒருங்கிணைப்பாளர்,**
**ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு**

தலையங்கம்

# நீலிக்கண்ணீர் வடிக்கும் மோகன் பகவத்!

ஜாதி ஒழிப்பு குறித்து ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்கள் கவனம் பெற்றுள்ளன. இதில், மோகன் பகவத்தின் கருத்தை சற்றே உற்று நோக்க வேண்டியுள்ளது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, மகாராஷ்டிர மாநிலம் சத்ரபதி சம்பாஜி நகரில் நிகழ்ச்சியில் மோகன் பகவத் பேசும்போது, “சமூக நடைமுறையில் இருந்து ஜாதிப் பாகுபாட்டை ஒழிக்க வேண்டுமானால், முதலில் மனதிலிருந்து ஜாதியை அகற்ற வேண்டும். கடந்த காலங்களில் ஜாதி என்பது தொழில் மற்றும் வேலையுடன் தொடர்புடையதாக இருந்தது. பின்னர் அது சமூகத்தில் ஆழமாக வேரூன்றி, பாகுபாட்டிற்கு வழிவகுத்தது. இதற்கு முடிவுகட்ட, ஒவ்வொரு மனதிலிருந்தும் ஜாதியை அகற்ற வேண்டும். இதை நேர்மையாகச் செய்தால், 10 முதல் 15 ஆண்டுகளுக்குள் ஜாதிப் பாகுபாடு ஒழிக்கப்படும்" என்று பேசியிருக்கிறார்.

அடடே, மோகன் பகவத்திற்கு ஜாதி ஒழிப்பில் எவ்வளவு அக்கறை பாருங்கள் என்ற ஆச்சரியக் குரல்களும் எழுந்திருக்கின்றன. இந்த சமயத்தில் மோகன் பகவத்திற்கு நாம் சில கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது. ஜாதியத்தின் தோற்றுவாயே பார்ப்பனியம்தான். பார்ப்பனிய மேலாதிக்க சிந்தனையும், செயல்பாடுகளும்தான் ஜாதியை இன்னும் தக்கவைத்திருக்கின்றன. எனவே பார்ப்பனிய மேலாதிக்கத்தைத் தகர்ப்போம், அதுதான் ஜாதியை ஒழிப்பதற்கான உண்மையான வழி என்று பேசுவதற்கு மோகன் பகவத் தயாரா என்பதே நாம் எழுப்பும் கேள்வி. அயோத்தியில் ராமர் கோயில் சிலை திறப்பு விழாவில் சூத்திரரான மோடி அழைக்கப்பட்டார் என்பதற்காகவே அவசர அவசரமாக குடமுழுக்கு விழாவுக்கு முந்தைய நாளே பார்ப்பனர்கள் பிரதிஷ்டை செய்தார்களே, அப்போது இந்த ஜாதிப் பாகுபாடு காட்டக்கூடாது என்று மோகன் பகவத் கூறினாரா?

பெங்களூரில் 19/01/2025 அன்று மூவாயிரம் பார்ப்பனர்கள் திரண்ட ‘கர்நாடக பிராமண மகா சபாவில்’ பேசிய காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திர சரஸ்வதி, “‘பிராமணர்கள்’ மட்டுமே குடியிருக்கும் ‘அக்கிரகாரங்களை’ உருவாக்க வேண்டும். தங்களின் குலம் மற்றும் கோத்திரங்களை ஆவணப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். ‘பிராமணர்கள்’ அல்லாதவரோடு கலந்து உறவாடக்கூடாது. மற்றவர்களோடு ஒன்றாக குடியிருக்கக் கூடாது, உணவருந்தக் கூடாது’’ என்றெல்லாம் இன ஒதுக்கலை வெளிப்படையாகப் பேசினாரே, அப்படிப் பேசியது தவறு என்று மோகன் பகவத்தால் சொல்ல முடியுமா?

இன்றைய நாகரீக உலகிலும் ஊர் தனியாகவும், சேரி தனியாகவும், அக்ரஹாரம் தனியாகவும் இருக்கலாமா? நாடு முழுவதும் இவற்றை ஒழித்துக்கட்டி அனைவரும் அனைத்து இடங்களிலும் வசிக்கலாம் என்று நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்ல மோகன் பகவத் முன் வருவாரா? ஜாதிக்கு மூலதனம் மதம், அந்த மதத்திற்கு மூலதனம் கடவுள், அந்த கடவுளுக்கு மூலதனம் சாஸ்திரங்கள். இவற்றை வேரோடு பிடுங்கி எறியாமல் ஜாதி ஒழியப்போவதில்லை. எனவே ஜாதிப்பாகுபாட்டை ஒழிப்பதற்கான வழி என்பதே இந்து மதத்தையும், இந்து கடவுள்களையும், வேத- புராணங்களையும் ஒழிப்பதுதான் என்பதே புரட்சியாளர் அம்பேத்கரும், பெரியாரும் நமக்கு காட்டியிருக்கும் வழி. அந்த வழி சரிதான், அதைப் பின்பற்றி ஜாதியை ஒழிக்கப் புறப்படுவோம் என்று சொல்ல மோகன் பகவத் தயாரா?

தமிழ்நாட்டில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்திற்கு எதிராக வழக்குகளைத் தொடுத்தது பார்ப்பனர்கள் நடத்தி வரும் ஆதி சிவாச்சாரியார்கள் சங்கம்தான். அந்த சங்கம் ஆர்எஸ்எஸ்-உடன் நேரடித் தொடர்பில் உள்ள சங்கம். கோயில் கருவறைக்குள் தீண்டாமை கூடாது, இந்துக்கள் அனைவரும் கருவறைக்குள் நுழைந்து கடவுளுக்கு அர்ச்சனை செய்யலாம், ஜாதிப் பாகுபாட்டை முதலில் இங்கிருந்து ஒழிப்போம் என்று சொல்ல மோகன் பகவத்திற்கு துணிச்சல் உள்ளதா? ஜாதி மறுத்து காதல் திருமணம் புரிந்தாலே கொலை செய்யும் அளவுக்கு செல்லும் ஜாதி வெறியர்களே, இனி அப்படிச் செய்யாதீர்கள், எல்லோரும் இந்துக்கள்தான், ஒரு இந்து எந்த ஜாதியைச் சேர்ந்த மற்றொரு இந்துவையும் திருமணம் செய்துகொள்ளலாம். அப்படி திருமணம் செய்துகொள்வோரை ஆர்எஸ்எஸ் அமைப்பு வரவேற்கிறது என்று அறிவிக்க மோகன் பகவத்திற்கு துணிச்சல் உள்ளதா?

ஜாதி ஒழிப்புக்கான லட்சியப் பயணத்தில் சமூக நீதி ஏற்பாடாக உருவாக்கப்பட்ட இடஒதுக்கீடு கொள்கையை சீரழிக்கும் விதமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு, உயர் ஜாதி ஏழைகளுக்கு பொருளாதார அடிப்படையில் 10% இடஒதுக்கீட்டை வழங்கியிருக்கிறது. சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின் தங்கியோருக்கு மட்டுமே இடஒதுக்கீடு என்ற நோக்கத்தை இது சிதைக்கிறது, எனவே பொருளாதார ரீதியிலான இடஒதுக்கீடு கூடாது என்று பா.ஜ.க.வுக்கு அழுத்தம் தர, அந்த முடிவை எதிர்க்க ஆர்.எஸ்.எஸ் தயாரா? இப்படி பல கேள்விகள் மோகன் பகவத்திற்கு உள்ளன. இவை எதற்குமே முன்வராத ஆர்எஸ்எஸ், வெறுமனே ஜாதிப் பாகுபாட்டை களைய வேண்டுமென்று பேசுவது கொலை செய்தவனே, ‘அய்யயோ இறந்துவிட்டானே’ என நீலிக்கண்ணீர் வடிப்பதற்கு ஒப்பானதாகும்.

# பேராசிரியர் சக்குபாய் மறைவு

*பேராசிரியர் சக்குபாய் மறைந்த செய்தி மிகவும் வேதனை அளிக்கிறது எங்களுடன் திராவிடர் கழகத்தில் பெரியார் இயக்கத்தின் குடும்பமாக இணைந்து பழகியவர்கள் பேராசிரியர் சக்கு பாயும் அவரது இணையர் பேராசிரியர் நெடுஞ்செழியன் அவர்களும் ஆவார்கள்.*

*1979 ஆம் ஆண்டு சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டு விழாவில் முதன்முறையாக பெரியார் மேடையில் பேசினார் பேராசிரியர் சக்குபாய். அப்போதுதான் அந்த இணையர்களை நான் சந்தித்தேன். தொடர்ந்து திராவிடர் கழக மேடைகளில் கருத்தரங்குகளில் இருவரும் பேசினார்கள். இந்த நட்பு குடும்ப உறவுகளாக மலர்ந்தது.*

*திருச்சி பெரியார் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயர் ஆய்வு மையத்தின் தலைவராக பேராசிரியர் சக்குபாய் செயல்பட்டார். அப்போது வைக்கம் நூற்றாண்டு விழாவை ஒட்டி கருத்தரங்கம் நடத்தி அந்த உரைகளை பல்கலைக்கழகம் சார்பில் நூலாக வெளியிட்டார்.*

*ஈழப் போராட்டத்தில் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக பெரியார் இயக்கத் தோழர்கள் மிகத் தீவிரமாக களம் இறங்கி செயல்பட்ட காலத்தில் இந்த இணையர்களின் பங்கு மகத்தானது. பொறியியல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த இந்த இணையர்களின் மகன் பண்ணன் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு விடுதலைப் புலி தோழர்களுடன் கடல் வழியாக ஈழம் சென்று போராட்டக்களத்தில் பங்கேற்று உயிர்த்தியாகம் செய்தார்.*

*அப்போது பேராசிரியர் நெடுஞ்செழியன் என்னிடம் இவ்வாறு கூறினார், "நாட்டில் விதைத்தேன்': வீட்டில் முளைத்து விட்டது" இந்த வரிகள் இப்போதும் நெஞ்சில் பதிந்து நிற்கிறது. திருச்சி பெரியார் மாளிகையில் பாதுகாக்கப்பட்டிருந்த பெரியாரின் ‘குடிஅரசு’ பத்திரிக்கை தொகுப்புகள் அச்சாக வெளிவர வேண்டும் என்று எல்லோரும் விரும்பினோம்.*

*ஒரு கோடை விடுமுறையில் ஒரு மாதத்திற்கு மேல் திருச்சி பெரியார் மாளிகையில் தங்கி ‘குடிஅரசு’ கட்டுரைகளை கையால் பிரதி எடுக்கும் முயற்சியில் சுமார் 15 தோழர்கள் ஈடுபட்டனர். அந்த பெரு முயற்சிக்கு பெருந்துணையாக ஆர்வத்தோடு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தவர் பெரியார் மாளிகை நிர்வாகியாகவும் தந்தை பெரியாரின் செயலாளராகவும் இருந்த எங்கள் அன்புக்குரிய மறைந்த புலவர் இமயவரம்பன் ஆவார். அந்தக் குழுவில் இணையர்கள் பங்கேற்றனர்.*

*ஒரு பயிற்சி வகுப்பில் தனித் தமிழ்நாடு விடுதலையை வலியுறுத்தி பேசினார் என்ற குற்றத்தை சுமத்தி கைது செய்யப்பட்டு 5 ஆண்டு காலம் பெங்களூரு சிறையில் இருந்தார் நெடுஞ்செழியன். அவரை சிறையில் இருந்து வெளியில் கொண்டு வருவதற்கு பெருமுயற்சி எடுத்தவர்களில் ஒருவர் மறைந்த தஞ்சை ரத்தினகிரி அவர்கள்.*

*தமிழ்நாட்டில் ஈழப் போராட்ட காலத்தில் அரசியல் பொறுப்பு ஏற்று செயல்பட்ட பேபி சுப்பிரமணியம் என்ற இளங்குமரன் ஈழத்தில் 1990-இல் அமைதி உடன்பாடு ஒன்று ஏற்பட்டபோது ஈழம் புறப்பட்டுச் சென்றார். இளங்குமரன் 9 ஆண்டுகாலம் எங்களது இல்லத்தில்தான் தங்கி இருந்தார். அவரை வழி அனுப்புவதற்கு நானும் எனது இணையர் மேடம் சரஸ்வதி அவர்களும் பேபி சுப்ரமணியம் அவர்களோடு திருச்சி சென்று கலைஞர் நகரில் உள்ள சக்குபாய் அவர்கள் இல்லத்தில் நான்கு நாட்கள் தங்கி, படகில் வழி அனுப்பி வைத்த நினைவுகள் நிழலாடுகின்றன.*

*தமிழ்நாடு அரசின் உயரிய விருதைப் பெற்ற பேராசிரியர் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மறைவுற்றார். தொடர்ந்து சக்குபாய் அவர்களும் விடைபெற்றுக் கொண்டு விட்டார். கொள்கைக்காக அந்த இணையர்கள் வாழ்ந்தார்கள் என்பது அவர்களின் பெருமைக்குரிய அடையாளம்.*

*அவரது மகள்கள் நகைமுத்து, குறிஞ்சிக்கும், குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**- விடுதலை இராசேந்திரன்,**
**பொதுச் செயலாளர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்.**
***19.01.2025.***

# வன்மவாதிகளுக்குப் பாடம் எடுத்த மாரி செல்வராஜ்!

*தந்தை பெரியார் முத்தமிழ் மன்றத்தின் சார்பில் இந்த ஆண்டு இயக்குநர் மாரி செல்வராஜிற்கு பெரியார் விருது வழங்கப்பட்டது. பெரியார் மீது வன்மக் கணைகளை வீசும் கூட்டத்துக்கு அப்போது தக்க பதிலடி கொடுத்த மாரி செல்வராஜின் பேச்சு இணையத்தில் கவனம் பெற்றது. அவரது பேச்சில் இருந்து......*

*“திருமணத்திற்கு என் இணையர் வீட்டில் எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஏற்றுக்கொண்டனர். ஏனென்றால் அவர்கள் வீட்டில் பெரியார் இருந்தார். எனக்குப் பெரியாரை அறிமுகப்படுத்தியதே என் இணையர்தான். நான் பெரியாரை விட மிகச்சிறந்த சிந்தனையாளன் என என்னை நிரூபிக்க வேண்டும் என்றால் பெரியாரைத் திட்டி நிரூபிக்க கூடாது. அதற்கும் மேலானதாக சிந்திக்கவேண்டும். பெரியாரை புரிந்து கொள்வது சாதாரணமான விஷயம் கிடையாது. அவர் எப்போதும் நம்மை மேம்படுத்துவதற்கான விஷயங்களையே சொல்லி இருக்கிறார்.*

*இன்னும் பெரியாரை வாசிக்க வாசிக்க, நன்றாகப் பேச கற்றுக் கொள்ளலாம். பின்பு அவரையே எதிர்த்துப் பேசலாம். இன்னொன்று அவரைப் பற்றி பேசும்போது மட்டும்தான் நீங்கள் பெரிய ஆளாக முடியும்.*

*ஆசானை மீறுவது என்ற ஒன்று உண்டு. ஆனால் ஆசானை மீறுவது என்பது ஆசானைக் குறை சொல்லி அல்ல, ஆசான் உங்களைப் பாராட்ட வேண்டும். ‘என்னை விட பெரிய இயக்குநர் ஆக வேண்டும். அப்போதுதான் நான் உனக்கு சரியாக கற்றுக் கொடுத்திருக்கிறேன் என அர்த்தம்’ என ராம் சார் என்னிடம் சொல்வார். எனவே நான் பெரியாரை விட மிகச்சிறந்த சிந்தனையாளன் என என்னை நிரூபிக்க வேண்டும் என்றால் பெரியாரைத் திட்டி நிரூபிக்கக்கூடாது.*

*பெரியாரின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் தீவிரமாக இயங்குவதே செய்ய வேண்டியது. எதை மக்களிடம் சேர்க்கிறோம் என்பது மிக முக்கியமானது. வன்மத்தையும், வெறுப்புணர்ச்சியையும், பிரிவினையையும் கொடுப்பது சாதனை கிடையாது. எல்லாவற்றையும் இணைப்பது.*

*அது ஜெயிப்போமா, தோற்போமா என்று தெரியாத யுத்தம். ஆனால் சாகும் வரை அந்த யுத்தத்தை நிகழ்த்திக் கொண்டே இருந்தீர்கள் என்பதே உங்கள் வாழ்வின் உன்னதமான நிலை. அந்த உன்னத நிலை தான் பெரியார் என புரிந்து கொண்டேன் நான்” என்றார் அவர்.*

# சிராவயல் ஆசிரமம் தொடங்கப்பட்டதன் பின்னணி!

## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் (11)

- கொளத்தூர் மணி

ஜீவாவின் காந்தி ஆசிரமக் கதைகளில் எதிலும் பதிவிடப்படாத அல்லது ஜீவாவால் சொல்லப்படாமல் தவிர்த்தத் தலைவரைப் பற்றி அறியும் முன்னர் வேறு சில செய்திகளையும் அறியவேண்டியுள்ளது.

ஜீவா நிறுவியதாகவும் அதனுடைய செயலாளராக இருந்து பணியாற்றியதாகவும் நம்ப வைக்கப்பட்டிருக்கும் அந்த சிராவயலில் இயங்கிய நிறுவனங்களை முதலில் நாம் அறிந்தாக வேண்டும்.

சிராவயலில் 1923-ஆம் ஆண்டிலிருந்து காந்தி வாசக சாலை என்ற ஒன்று செயல்பட்டு வந்திருக்கின்றது. அதன் பின்னரே ‘தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகம்’ உருவாக்கப்பட்டு பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

### ஏடுகள் தரும் செய்தி!

அவ்வாறான காந்தி வாசக சாலையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா ஒன்று 12.05.1925 அன்று நடைபெற்றிருக்கிறது. அவ்விழா ‘நவசக்தி ஆசிரியர் திருவாளர் திரு.வி.கல்யாண சுந்தரம் முதலியார்’ அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றதாகவும், அந்த விழாவில் திரு.வி.க. அவர்கள் ‘காந்தி தருமம், ஜீவகாருண்யம், தமிழின் இனிமை’ முதலியவைகளைப் பற்றி மிக அழகாக எடுத்துரைத்து உரையாற்றியதாகவும் ‘தனவைசிய ஊழியன்’ ஏட்டின் 12.05.1925 இதழில் செய்தி வெளியாகி இருக்கிறது.

அதற்கு முன்னரே ‘தனவைசிய ஊழியன்’ ஏட்டில் 21.04.1925 நாளிட்ட இதழின் மூன்றாம் பக்கத்தில் ‘தனவைசிய நாட்டுத் தமிழ் கல்விக் கழகம்’ என்ற ஓர் அமைப்பு உருவானது குறித்த செய்தி வெளியாகியிருக்கிறது.

அதில் ‘இக்கழகம் குரோதன ஆண்டு சித்திரைத் திங்கள் ஏழாம் நாள் (21.4.1925) காணப்பெற்றது என்றும், தலைவராகக் காரைக்குடி திருவாளர் ராய. சொக்கலிங்கம் அவர்களும், காரியதரிசியாக சிராவயல் திருவாளர் மு.காசி விஸ்வநாதன் செட்டியார் அவர்களும் செயலாற்றுவார்கள் என்றும், அன்பர்களின் நன்கொடைப் பொருளை ஏற்று பள்ளிகள் காண வேண்டிய ஊர்களில் கண்டு, பிறர் தங்கள் பள்ளிகளைக் கழகக் கொள்கைக்கு இசைந்து நடத்துமாறு வேண்டினால் நடத்திட வேண்டுவன செய்தல், கழகக் கொள்கைக்கிணங்கி நடத்தும் பள்ளிகட்குக் குறிப்பிட்ட ஒரு தொகை கொடுத்தல் அல்லது இயன்ற உதவி செய்தல்’ போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன”.

21.04.1925 நாளிட்ட அதே ‘தன வைசிய ஊழியன்’ ஏட்டின் 7-ஆம் பக்கத்தில் ‘தன வைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகம்’ என்ற தலைப்பில் மற்றொரு செய்தி வெளியாகி இருக்கிறது.

அச்செய்தியின் கடைசிப் பகுதியில், ‘இன்று இக்கழகச் சார்பாக நடைபெறுவதற்கு சிராவயலில் திரு மு.கா. (மு காசி விஸ்வநாதன்) அவர்களால் நடத்தப்பெறும் ஒரு பள்ளியும், தேவகோட்டையில் திரு வெ. அழ. அவர்களால் காணப்போகும் ஒரு பெண் பள்ளியும் தயாராக இருப்பதாக அறிகிறோம். இந்த ஆண்டிற்குள்ளேயே இன்னும் பல பள்ளிகள் தோன்ற இறைவன் அருள்வானாக... விரிவஞ்சி விடுக்கின்றோம்; சந்தர்ப்பம் நேர்ந்துழி வரைவோம்’ என்று அந்த செய்தி முடிவடைகிறது.

**காந்தி ஆசிரமத்தை சிராவயலில் நிறுவியது பலராலும் நம்ப வைக்கப்பட்டு இருப்பதுபோல தோழர் ஜீவானந்தம் அவர்கள் அல்ல; அது தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகத்தின் முயற்சியில் நிறுவப்பட்டு நடத்தப்பட்டிருக்கிறது.**

அடுத்து அதே ‘தனவைசிய ஊழியன்’ ஏட்டில் 23.06.1925 நாளிட்ட இதழின் 18-ஆம் பக்கத்தில் மற்றொரு செய்தியும் வெளியாகி இருக்கிறது. ‘நாளிது ஆனித் திங்கள் ஆறாம் நாள் காரைக்குடி திரு ராய. சொக்கலிங்கன் அவர்கள் வீட்டில் கூடிய கூட்டத்தில் மருதங்குடியில் (சிராவயலில்) கழகச் சார்பில் ஆவணி மாதத்தில் காந்தி பள்ளிக்கூடம் என்ற பெயரோடு ஒரு பள்ளிக்கூடம் திறப்பது என தீர்மானிக்கப்பட்டது. இக்கழகத்திற்கு காரைக்குடி திரு ராய.சொக்கலிங்கன் அவர்கள் 200 ரூபாயும், சிராவயல் திரு மு. காசி விஸ்வநாதன் செட்டியார் அவர்கள் 200 ரூபாயும் எனத் தொடங்கி பலரும் நன்கொடையாக அன்றே கொடுத்துள்ளனர். ஏனைய நண்பர்கள் உதவியை எதிர்பார்க்கின்றோம்’ என காரியதரிசி திரு மு.காசி விஸ்வநாதன் செட்டியார் எழுதுகிறார் என்றும், மருதங்குடியில் (சிரா வயலில்) காந்தி பள்ளிக்கூடம் ( காந்தி ஆசிரமம்) என்ற பள்ளிக்கூடத்தை ஆவணி (1925, ஜூலை மாதத்தில்) திறப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ள செய்தியையும் நாம் அறிகிறோம்.

இவ்வாறான பள்ளிக்கூடங்களை எழுப்ப வேண்டும் என்ற உணர்வோடு செயல்பட்டு இருக்கிற அந்த தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகத்தார்தான் சேரன்மாதேவி குருகுலத்திற்கு அதிக நன்கொடைகள் அளித்தனர் என்பதும், அந்தக் குருகுல எதிர்ப்புப் போராட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தனவைசிய நாடான காரைக்குடி, கானாடுகாத்தான் போன்ற ஊர்களில் நடைபெற்ற தமிழர் கூட்டம், தமிழர் இயக்கம் என்ற அமைப்புகளால் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒருவேளை அதனால்தான் சேரன்மாதேவி தமிழ்க் குருகுல வித்தியாலயத்துக்கு (தேசிய தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு) ‘பரத்வாஜ ஆசிரமம்’ என்று வ.வே.சு. அய்யரால் பெயர் சூட்டப்பட்டிருந்ததை எண்ணியே சிராவயல் பள்ளிக்கூடத்துக்கு ‘காந்தி ஆசிரமம்’ என்று பெயர் சூட்டியிருக்க வேண்டும்.

### வாசக சாலை விழாவில் பெரியார்!

அதன் தொடர்ச்சியாக காரைக்குடி சொ.முருகப்பா அவர்களால் நடத்தப்பட்ட ‘குமரன்’ வார ஏட்டின் 31.3.1926 நாளிட்ட இதழின் 9-ஆம் பக்கத்தில் ‘சிராவயல் காந்தி வாசகசாலை’ என்ற தலைப்பில் வெளியாகி உள்ள ஒரு செய்திக் குறிப்பினைப் பார்ப்போம்.

“இவ்வாசக சாலையின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நாளது மாதம் பங்குனி 24-ஆம் தேதி அதாவது 6.04.1926 செவ்வாய்க்கிழமை மாலையில் ஈரோடு குடியரசு ஆசிரியர் ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் திருவாளர்களான திருப்பழனம் வ. ராமசாமி அய்யங்கார், அமராவதிப் புதூர் பிச்சப்பா சுப்ரமணியம், ஊழியன் ஆசிரியர் ராய. சொக்கலிங்கன் ஆகியோர்களின் பேருரை நிகழும். அன்று காலை 9 மணிக்கு திருவாளர் நாயக்கர் அவர்களால் காந்தி கிணறு திறக்கப்படும். மருதங்குடி ஆதிதிராவிடர்களும், காந்தி ஆசிரமத்தாரும் திருவாளர் நாயக்கருக்குத் தனித்தனியே உபசாரப் பத்திரம் (வரவேற்பு இதழ்) படித்துக் கொடுப்பார்கள் என்று மேற்படி வாசக சாலையார் அறிவிக்கிறார்” என்பதே அந்த செய்திக்குறிப்பு.

அதே பக்கத்தின் மற்றொரு இடத்தில், ஓர் மறுப்பு’ “ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அவர்கள் எழுதுகிறார்” என்ற தலைப்பில் கோயம்புத்தூர் தாலுகா மாநாட்டு நிகழ்வு பற்றிய ஓர் அறிக்கையும் வெளியாகி உள்ளது. அதே ‘குமரன்’ ஏட்டின் 07.04.1926 நாளிட்ட இதழின் 8-ஆம் பக்கத்தில் உள்ள செய்தியையும் பார்ப்போம்.

‘நேற்று முற்பகல் 10 மணிக்கு குடிஅரசு ஆசிரியர் ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் அவர்கள் காந்தி கிணற்றைத் திறந்து வைத்தார். எல்லாரும் அதில் தண்ணீர் அருந்தினர். பஞ்சமர்களும், காந்தி ஆசிரமத்தாரும் ஸ்ரீமான் நாயக்கருக்குத் தனித்தனி உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தனர். அவர்களுக்கு நாயக்கர் பதில் அளித்தார். பின்னர் காந்தி வாசக சாலையில் மாலை 6 மணிக்குக் கூட்டம் கூடியது. பல ஊர்களில் இருந்தும் தன வைசிய வாலிபர்கள் ஏராளமாக வந்து கூடியிருந்தனர். ஸ்ரீமான் நாயக்கர் தலைமை வகித்து சில நிமிஷங்கள் முகவுரை கூறினார். ஸ்ரீமான் வ.ராமசாமி அய்யங்கார் அவர்களும், ஸ்ரீமான் பிச்சப்பா சுப்ரமணியம் செட்டியார் அவர்களும், ஸ்ரீமான் ராய. சொக்கலிங்க செட்டியார் அவர்களும் முறையே ‘கடமையும் உரிமையும்’ ‘சுதந்திரம்’ ‘வகுப்பு’ எனும் பொருள்களைப் பற்றி உரையாற்றினார்கள். மதுரை ஊமைப்பிள்ளை (பள்ளிக்கூட ஆசிரியர்) தமது பள்ளிக்கூடத்தைப் பற்றி சில வார்த்தைகள் கூறினார். தலைவர் இரண்டே கால் மணி நேரம் அரசியல், ஆசாரத் திருத்தம், தற்கால மதவாதிகளின் போக்கு முதலியவற்றைப் பற்றி எளிய நடையில் ஒவ்வொருவருடைய உள்ளமும் உருகுமாறு உண்மை உணர்வும் பொருட்பொலிவும் உள்ள வசனத்தில் உபந்யசித்தனர். ஸ்ரீமான் மு.காசி விசுவநாதன் செட்டியார் அவர்களால் வந்தனம் கூறப்பெற்று இரவு 9 மணிக்கு இனிது நிறைவெய்தியது’ என்கிறது அந்தச் செய்தி.

### ஜீவாவுக்கு என்ன தொடர்பு!


தன வைசிய ஊழியன் இதழில் 1925ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிராவயல் பள்ளி திறப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ள செய்தியை ஏற்கனவே பார்த்தோம். ஆனால் என்ன காரணத்தாலோ முன் குறிக்கப்பட்ட நாளில் சிராவயல் பள்ளி (ஆசிரமம்) திறக்க முடியாமல் போயிருக்கிறது.

25.4.1926 ஆம் நாளிட்ட ‘குடி அரசு’ இதழின் 11ஆம் பக்கத்தில் ‘ஸ்ரீ காந்தி ஆசிரமம், சிராவயல்’ என்ற தலைப்பில் அந்த ஆசிரமத்தின் தலைவரான கு. கும்பலிங்கம் அவர்கள் ஓர் அறிக்கையினை வெளியிட்டு இருக்கிறார். அந்த அறிக்கையின் முதல் பகுதி இப்படித் தொடங்குகிறது. ‘மகாத்மா காந்தியடிகளின் திருப்பெயர் கொண்டிருக்கும் இவ்வாசிரமம் குரோதன வருடம் தை மாதம் 29-ஆம் நாள் சிரா வயலில் ஆரம்பிக்கப்பட்டது’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது பொது ஆண்டுக்கணக்கில் பார்த்தால் அந்த நாள் 11.02.1926 ஆகும்.

அந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில் “இஃது தனவைசிய நாட்டுக் கல்விக் கழகத்தாரால் நடத்தப்படுகிறது. இதில் 25 ஆதிதிராவிட மாணவ மாணவிகள் போதிக்கப்படுகின்றனர். இவர்களின் படிப்பைப் பார்த்து மகிழ்ச்சியுற்று நண்பர்கள் பலர் ஆடை, கற்பலகை முதலியன பரிசளித்து வருகிறார்கள். ஸ்ரீ காந்தி ஆசிரமம், ஸ்ரீ காந்தி வித்யாலயம், இராப் பள்ளிக்கூடம் இவைகளை ஸ்ரீமான் கும்பலிங்கம் தலைமை வகித்து நடத்தி வருகிறார்” என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இதுவரை குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளில் இருந்து நாம் அறிந்து கொள்வது காந்தி ஆசிரமத்தை சிராவயலில் நிறுவியது பலராலும் நம்ப வைக்கப்பட்டு இருப்பதுபோல தோழர் ஜீவானந்தம் அவர்கள் அல்ல; அது தனவைசிய நாட்டுத் தமிழ்க் கல்விக் கழகத்தின் முயற்சியில் நிறுவப்பட்டு நடத்தப்பட்டிருக்கிறது என்ற ஒரு செய்தியை நம்மால் அறிந்து கொள்ள முடியும். இத்தொடரின் 3ஆம் தொடரில் உள்ள ‘தமிழ்நாட்டில் காந்தி’ என்ற நூலின் 541-ஆவது பக்கத்தில் கீழ்க்கண்ட செய்திகள் பாகனேரி வழி என்ற தலைப்பில் 27.09.1927 அன்று நிகழ்ந்ததாகக் காணப்படுகின்றன. “தன வணிகர் கல்விக் கழகம் (இக்கல்விக் கழகத்தின் ஆதரவில் பல ஊர்களில் 15, 16 ஆரம்பப் பள்ளிகள் நிறுவப்பெற்று நடைபெற்று வந்தன. இது ஒரு அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனம்) நடத்தி வந்த பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணாக்கர்கள் சிலர் ப.ஜீவானந்தம் (பிற்காலத்தில் பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர்), கும்பலிங்கம் ஆகியோர் தலைமையில் காந்திஜியைக் காண வந்தார்கள்” என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மேலும் தெளிவு கிடைக்கும்.

## இங்கர்சால் மறைவு



திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை மாவட்டத் தலைவர் ராமச்சந்திரன் அவர்களின் மகன் "இங்கர்சால்" 17.01.26 சனிக்கிழமை அதிகாலை மாரடைப்பால் முடிவெய்தினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை 4 மணி அளவில் மேட்டுப்பாளையம் சென்டயூரில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்று "இங்கர்சால்" உடலுக்கு புகழ்வணக்கம் செலுத்தி, நினைவேந்தல் உரையாற்றி இரங்கல் தெரிவித்தார்.

மேட்டுப்பாளையம் எஸ்.எம்.எஸ் சிக்பால் (ம.தி.மு.க), சந்திரசேகர் (த.பெ.தி.க), அஷ்ரப் அலி (தி.மு.க), வேலுச்சாமி (தி.க), கோபால் (பா.ஜ.க.), அருள்வடிவு (மேட்டுப்பாளையம் நகர மன்ற துணைத் தலைவர்), முனுசாமி (தி.மு.க தெற்கு நகரச் செயலாளர்) ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

துரைசாமி (கழகப் பொருளாளர்), ரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்), பன்னீர் செல்வம்(கோவை மாவட்டச் செயலாளர்), நிர்மல்குமார்( கோவை மாநகரத் தலைவர்), அமுல்ராஜ் (மேட்டுப்பாளையம் நகரப் பொறுப்பாளர்), அய்யப்பன் (திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), முத்து (திருப்பூர் மாநகர அமைப்பாளர்), சண்முகம் (பல்லடம் ஒன்றிய அமைப்பாளர்), திருப்பூர் இனியன், ராமசாமி (திருப்பூர் தெற்கு பகுதி அமைப்பாளர்), தமிழ்ச்செல்வி, இசைமதி, ராஜலட்சுமி ஆகிய கழத் தோழர்கள் பங்கேற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ. ராசா மற்றும் மேட்டுப்பாளையம் பகுதி பொறுப்பாளர்களும் தோழர் இங்கர்சால் அவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# கிராமங்கள்தோறும் பிரச்சாரம் – கோவை மாவட்டக் கழகம் முடிவு!

கோவை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 03.01.2026 அன்று தமிழ்ப் புலிகள் கட்சி தலைமை அலுவலகத்தில் சூலூர் பன்னீர்செல்வம் (மாவட்டக் கழகச் செயலாளர் ) தலைமையில் நடைபெற்றது.

கழகத்தின் 2025-ஆம் ஆண்டு செயல்பாடுகள், 29.12.2025 அன்று அன்று கோவையில் நடந்து முடிந்த போராட்டத்தின் நிறைகுறைகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டு போராட்ட வரவு - செலவுக் கணக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேலும் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்கள் பின்வருமாறு:-



1. அண்மையில் மாரடைப்பால் முடிவெய்திய கழகக் காரமடை பகுதி அமைப்பாளர், பொறியாளர் ஜெகதீசு அவர்களுக்கு கோவை மாவட்டக் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. மிகவிரைவாக அவர் வாழ்ந்த காரமடையில் நினைவேந்தல் கூட்டம் நடத்துவதென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

2. கோவையில் நடந்து முடிந்த ஜாதியத் தீண்டாமைக்கு எதிரானப் போராட்டத்திற்கு முகம் அறியாத - வெளிநாட்டில் வசிக்கும் பலரும் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து 100, 200, 500,1000 ரூபாய் என தங்களால் இயன்ற நிதியினை வழங்கி போராட்டத்திற்கு உதவி செய்துள்ளனர். அவர்களுக்கு கோவை மாவட்டக் கழகம் மனதார நன்றி பாராட்டிக் கொள்கிறது.

3. போராட்டப் பணியில் ஆர்வத்துடன் பங்கேற்று, போராட்ட வெற்றிக்காக அர்ப்பணிப்போடு செயலாற்றிய கழகத்தின் இளம் வேர்களை கோவை மாவட்டக் கழகம் பாராட்டி மகிழ்கிறது.

4. கோவை போராட்டத்தில் மாநில அளவில் அனைத்து மாவட்டங்களில் இருந்து பெருந்திரளாகக் கலந்துகொண்ட கழகச் செயல்வீரர்களுக்கும், அவர்களை ஒருங்கிணைத்து அழைத்து வந்த மாவட்டப் பொறுப்பாளர்களுக்கும், போராட்டத்தை நடத்த அனுமதியளித்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கும் கோவை மாவட்டக் கழகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

2025-ஆம் ஆண்டில் கோவை மாவட்டத்தில் செய்த பணிகளைக் காட்டிலும் 2026-ஆம் ஆண்டு கூடுதலாகவும் சிறப்பாகவும் வேகமாகவும் கிராமங்கள் மற்றும் புதிய பகுதிகளில் பிரச்சாரம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், தற்போது வரை சேர்த்த ரூ.3600 பெரியார் முழக்கம் சந்தா தொகையை ஒப்படைத்தார். நிர்மல் குமார், வெங்கட், தமிழ்ச்செல்வி, நிலவழகன், சதீஷ், சிவராசு, நவீன், சத்தியமூர்த்தி, கதிரவன், தரணி, லோகநாயகி, மோகன கிருஷ்ணன் கலந்து கொண்டனர்.

# கோபியில் தெருமுனைப் பிரச்சாரம்!



ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கடந்த 04.01.2026 ஞாயிறு அன்று கோபி அம்மாபேட்டை ஒன்றியம் சனி சந்தை பகுதியில், 'மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்!' தெருமுனை பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.

செல்வகுமார் (மாவட்டச் செயலாளர்) தலைமையேற்றார். சிவானந்தம் (தோணி மடுவுத் திட்ட ஒருங்கிணைப்பாளர்), தைரியமணி (புஇமு), பாரி (அருந்தமிழர் வாழ்வுரிமைக் கட்சி), காவலாண்டியூர் குமரேசன், நாத்திகசோதி (மாவட்டத் தலைவர்) ஆகியோர் உரையாற்றினர். பரப்புரை பயணத்தின் நோக்கத்தினை விளக்கி இராம. இளங்கோவன் (வெளியீட்டுச் செயலாளர்) விளக்க உரையாற்றினார். இரமேசு நன்றி கூறினார்.

பெரியார், அம்பேத்கர், கழகத்தின் செயல்பாடுகள் குறித்த குறும்படங்கள் திரையிடப்பட்டன. கூட்டத்தில் ஈரோடு வடக்கு மாவட்ட கழகத் தோழர்களும், காவலாண்டியூர் பகுதி கழகத் தோழர்களும், பெரியார் தொழிற்சங்க பேரவை தோழர்களும் கலந்து கொண்டனர். தோழருக்கான உணவு ஏற்பாடுகளை தோனிமடுவு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிவானந்தம் ஏற்பாடு செய்தார்.

# பொள்ளாச்சியில் சீமானைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தந்தை பெரியாரைப் பற்றி தொடந்து அவதூறு பரப்பி வரும் சீமானைக் கண்டித்து அனைத்து கட்சி இயக்கங்கள் சார்பாக 06.01.2026 அன்று பொள்ளாச்சி காந்தி சிலை புதிய திட்ட சாலையில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.




வே.வெள்ளிங்கிரி திவிக தலைமையில், கோ.சபரிகிரி தொடக்க உரையாற்ற கா.சு. நாகராஜ் (திராவிட இயக்க தமிழர் பேரவை), கா. மாரிமுத்து (மக்கள் விடுதலை முன்னணி), சி மாரிமுத்து (திக), தமிழ்க் குமரன் (ஜெய்பீம் அறக்கட்டளை), குட்டி (விசிக), வாணுகன் (தமிழ்ப் புலிகள் கட்சி), தமிழ்பிரபா (மே 17), கவிஞர். முருகானந்தம் (மாற்று திறனாளிகளுக்கான நியமன நகர மன்ற உறுப்பினர்) ஆகியோர் கருத்துரையாற்றினர். சண்முக வேல் பிரபகரன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை) நன்றியுரையாற்றினார். கழகத் தோழர்கள் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஜி.ஆர்.சுவாமிநாதன் பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டம்!

விழுப்புரம் மாவட்டக் கழத்தின் சார்பில் திருப்பரங்குன்றத்தில் மதவெறியை தூண்டும் நீதிபதி சாமிநாதனே பதவி விலகு இந்து, இஸ்லாமியர் ஒற்றுமையை வலியுறுத்தி பரப்புரைக் கூட்டம் 18/12/25 அன்று மாலை 5 மணியளவில் பாக்கம் கூட்ரோடு சந்திப்பில் மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன் தலைமையில் நடைபெற்றது. பெரியார் தொண்டர் சிற்பி ராசன் அவர்களின் மந்திரமல்ல! தந்திரமே! என்ற சாமியார்களின் மோசடிகளை அம்பலப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. பெரியார் சாக்ரட்டீஸ் (மாவட்டச் செயலாளர்) முன்னிலை வகித்தார். சீனு செல்வரங்கம் (கண்டமங்கலம் மையக் குழு ஒன்றியச் செயலாளர், மாவட்ட கவுன்சிலர்), டிவி.நகர் ராஜா (தலித் பபாதுகாப்பு இயக்கம்), விஜி (பகுத்தறிவு வாழ்வுரிமைக் கட்சி), வீராணம் சு. ஆற்றரலசு (மேனாள் மாவட்டச் செயலாளர் விசிக), தீனா (தலைவர்,பெரியார் சிநந்தனையாளர் இயக்கம்), ந.அய்யனார் (கழக தலைமைக்குழு உறுப்பினர்) ஆகியோர் உரையாற்றினர். வழக்கறிஞர் வீ.அழகரசன் சிறப்புரையாற்றினார். கழகத் தோழர் அழகர் நன்றி கூறினார்.

கு.செல்வமணி (திமுக தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர்), ந.புருசோத்தமன் (தி.மு.க ஆதிதிராவிடர் நல மாவட்டத் துணை அமைப்பாளர் ), எஸ். காஞ்சிநாதன் (திமுக விவசாயத் தொழிலாளர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்), பூ.ராமதாஸ் (திமுக தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்), கார்த்திகேயன் (திமுக மத்திய ஒன்றிய நிர்வாகி), தனஞ்செயன் (திமுக மண்டகப்பட்டு கிளை கழகச் செயலாளர்), பாக்கம் திமுக கிளைக் கழகம் நிர்வாகிகள் கங்காநாதன், பழனிச்சாமி ,ஜெயகணேஷ், ஜெயமூர்த்தி ஏகாம்பரம், மணிகண்டன், பாலமுருகன், ரஞ்சித்குமார் பூவேந்தன், காமராஜ், பழனிச்சாமி, விசிக நிர்வாகிகள் தெய்வநாயகம், கண்டமங்கலம் (ஒன்றிய துணைச் செயலாளர்) வழக்கறிஞர் தமிழரசன் (பனையடிக்குப்பம் விசிக), நல்லப்பரெட்டிபாளையம் தமிழ்ச்செல்வன், மண்டகப்பட்டு விருமாண்டி வேலு, சசிகுமார், வீராணம் ராகுல் ஆழியூர், கதிரவன் திருவண்டார்கோயில், பாஸ்கர்தாஸ், ராம்பாக்கம், மருதூர் வள்ளல் மற்றும் விழுப்புரம் மாவட்டக் கழகத் தோழர்கள் நிகழ்ச்சியில் திரளாகக் கலந்துகொண்டனர்.

புரட்சிப் பெரியார் முழக்கம்

ஆண்டு சந்தா ரூ.300/- | ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-

தொடர்புக்கு: 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை 600096. | பேச: 63697 76351

முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: newsdvk@gmail.com

# பனமரத்துப்பட்டி ஏரியை சீரமைக்கக்கோரி ஆர்ப்பாட்டம்!



சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி ஏரியை புனரமைத்து மேட்டூர் உபரி நீரை தேக்கி, சுற்றுலாத்தளமாக்க வேண்டி கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர் போராட்டங்களை அப்பகுதி விவசாயிகள் நடத்தி வருகிறார்கள். அதன் ஒரு பகுதியாக உயர் நீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்தி, ஏரியை புரைமைத்து முகப்பில் சோழர்கள் சிலையை நிறுவ வலியுறுத்தி காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்நாடு ஏரி, இயற்கை பாதுகாப்பு இயக்கம் சார்பில் 05.01.2025 திங்கள் காலை 10.00 மணியளவில் பனமரத்துப்பட்டி ஏரி அருகில் நடைபெற்றது. இந்த போராட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் தோழர் டேவிட் கலந்து கொண்டு போராட்டத்தை ஆதரித்து கண்டன உரை நிகழ்த்தினார்.

# சென்னை, கோவை, சேலத்தில் "வெனிசுலா ஆதரவுப் போராட்டம்"







சென்னையில் வெனிசுலாவை அடிமையாக்கும் அமெரிக்காவின் போர் வெறியை முறியடிப்போம் என்ற முழக்கத்துடன் மக்கள் அதிகாரம் ஒருங்கிணைப்பில் 10.01.26 அன்று நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் இரா. உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) உரையாற்றினார். வேழவேந்தன் (மாவட்டத் தலைவர்) மற்றும் கழகத் தோழர் அசோக் ஆகியோர் பங்கேற்றனர்.

கோவையில் மேலாதிக்க வெறி பிடித்த அமெரிக்காவே மதுரோவை விடுதலை செய்,வெனிசுலாவிலிருந்து இராணுவத்தை வெளியேற்று என்ற முழக்கத்துடன் மக்கள் அதிகாரம், சிபிஎம்எல் ரெட் ஸ்டார், மக்கள் விடுதலை முன்னணி ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் நிர்மல் (கோவை மாநகரச் செயலாளர்) உரையாற்றினார். தோழர்கள் வெங்கட், தரணி, அறிவுக்கனல் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

சேலத்தில், வெனிசுலா இந்தியா உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளின் வளங்களைக் கொள்ளையடிக்க துடிக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய மேலாதிக்கத்திற்கு எதிராக ஒன்று திரண்டு போராட வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா ஆகியோர் கடத்தலை கண்டித்தும் உடனே விடுதலை செய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் 12/1/2026 காலை 10 மணி அளவில் சேலம் கோட்டை மைதானத்தில் இடதுசாரி கூட்டு இயக்கம் நடத்தியது. ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் மாவட்டக் கழகத்தின் சார்பாக இரா. ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்) கலந்து கொண்டு அமெரிக்க அதிபர் ட்ரம்பின் ஆதிக்க அரசியலைக் கண்டித்தும் கண்டனவுரையாற்றினார்.

# காரமடை கழகத்தோழர் ஜெகதீஷ் காலமானார்!

கோவை மாவட்டக் கழகத்தின் காரமடை பகுதி அமைப்பாளர் ஜெகதீஷ் 31.12.2025 அன்று மறைவுற்றார். பெரியார் கொள்கைகளை பரப்புவதிலும் பரப்புகிறவர்களுக்கு துணை நிற்பதிலும் தோழர் ஜெகதீஷ் முன்மாதிரியானவர். தோழரின் இணையர் கவிதா அவர்களும் பெரியாரிய கொள்கைப் பற்றாளராவார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி 17.01.2026 சனிக்கிழமை அன்று, மத்தாம்பாளையம், கோட்டை பிரிவு, இன்னிசை நகரில் உள்ள ஜெகதீஸ்-கவிதா இல்லத்திற்கு சென்று தோழரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

நிகழ்வில் துரைசாமி (கழகப் பொருளாளர்), ரத்தினசாமி (மாநில அமைப்புச் செயலாளர்), பன்னீர் செல்வம் (கோவை மாவட்டச் செயலாளர்), நிர்மல்குமார் (கோவை மாநகரத் தலைவர்), அமுல்ராஜ் (மேட்டுப்பாளையம் நகரப் பொறுப்பாளர்), அய்யப்பன் (திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), முத்து(திருப்பூர் மாநகர அமைப்பாளர்), சண்முகம் ( பல்லடம் ஒன்றிய அமைப்பாளர்), திருப்பூர் இனியன், ராமசாமி (திருப்பூர் தெற்கு பகுதி அமைப்பாளர்), காவை அவினாசி ஆகிய கழகத் தோழர்கள்உடனிருந்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 23, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
And Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor : K. Rajendran